பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 13 (26—3—68) செவ்வாய் ★ வெளியூர்: பங்குனி 14 (27—3—68) புதன் [இதழ்: 237

இறந்த பஸ் தொழிலாளருக்குச் சட்டமன்றம் மரியாதை

சென்னை, மார்ச் 26—

அரசுப் பேருந்துத் தொழிலாளருக்கும் — மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக இறந்த தொழிலாளருக்கு, இன்று சட்டமன்றம் தனது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டது.

அமைதி -- நீதி நிலைநாட்டுவோம்

அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும்

பஸ் தொழிலாளர் -- மாணவர் மோதல் குறித்து அண்ணா அறிக்கை

நிகழ்ந்தவை குறித்து நீதிவிசாரணை நடத்த உத்தரவு

சென்னை, மார்ச் 26—

சென்னையில் அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்கட்கும் — மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக உருவெடுத்த வருந்தத்தக்க சூழ்நிலை குறித்தும், நிலைமைச் சீரடைய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று சட்டமன்றத்தில் உருக்கமானதோர் அறிக்கை வெளியிட்டார்.

அமைதியும் நீதியும் நிலைநாட்ட எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும், அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும், அண்ணா அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள்.

தாக்குதலுக்கு ஆளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பஸ் தொழிலாளர் ஒருவர் இன்று மரணமடைந்த செய்தியை கண்கலங்க அண்ணா அவர்கள் அவைக்கு அறிவித்தார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்தவும் ஆணை பிறப்பித்துள்ளதாக அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

அண்ணா அவர்களின் அறிக்கைக்கிணங்க அவையில் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களெல்லாம் திரும்பப் பெறப்பட்டன.

முதலமைச்சரின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் உறுதியளித்தார்.

இன்று பகல் 12-மணிக்கு, எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி ஆலோசனை நடத்தி, கட்சித் தலைவர்களின் வேண்டுகோள்கள் அடங்கிய கூட்டறிக்கை ஒன்றினை விடுக்க எண்ணியுள்ளதாக அண்ணா அவர்கள் அறிவித்ததை, கட்சித் தலைவர்களும் ஏற்றனர். அதன்படி, சட்டமன்றத்திலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் அண்ணா அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

அமைதியை நிலைநாட்டுமாறும், அரசுடன் ஒத்துழைக்குமாறும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சட்டமன்றக் கேள்வி நேரம் முடிந்ததும், சட்டமன்ற 82 வது விதிக்கு இணங்க, முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"வருந்தத்தக்க நிகழ்ச்சி ஒன்றினை இந்த அவையில் தெரிவிக்க நேர்ந்ததற்காக வருந்துகிறேன். நேற்று மாலை அரசுப் பேருந்தில் பயணம் செய்த சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் - கண்டக்டருக்கும் தகராறு ஏற்பட்டு— அந்தப் பேருந்தை மாணவர்கள் தள்ளிச் சென்று சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் வைத்துக் கொண்டனர்.

அதனையடுத்தும், தொடர்ந்து மாணவர்களுக்கும் - பஸ் தொழிலாளர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. அதன் விளைவாகக் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கைகலப்பு ஏற்பட்டதையடுத்து, பஸ் தொழிலாளர்கள் அனைவரும், தாங்கள் ஓட்டிச்சென்ற பஸ்களை வழியிலேயே நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு, ஊர்வலமாக முதலமைச்சர் இல்லத்துக்கு வந்து முறையிட்டனர்.

இதனையடுத்து, எல்லா அமைச்சர்களும் முதலமைச்சர் இல்லத்துக்கு விரைந்து வந்து, கலந்து பேசினர்.

எல்லா அமைச்சர்களையும் தொழிலாளர்கள் சந்தித்தனர்; 'நியாயம் கிடைக்கும்' என்று அவர்களுக்கு உறுதி கூறி, அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது; தொழிலாளர்களும் அமைதியாக இருக்கச் சம்மதம் தெரிவித்தனர்.

போக்குவரத்துத் துறை அதிகாரிகளும்—போலீசுத் துறை மேல்மட்ட அதிகாரிகளும் சென்று, மாணவர்களிடம் அந்தப் பேருந்தை விடுவிக்குமாறு வேண்டினர்; ஆனாலும் அவர்கள், தர மறுத்துவிட்டனர்.

சட்டக் கல்லூரி விடுதியில் மீண்டும் கைகலப்பு ஏற்பட்டது; இரு தொழிலாளர்களும், இரு மாணவர்களும் காயமடைந்தனர்; அவர்களில் ஒருவர் இன்று இறந்துவிட்டார் என்ற நெஞ்சுருக்கும் செய்தி கிடைத்திருக்கிறது.

சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் திரண்டிருந்த மாணவர்களுக்கும் — தொழிலாளர்களுக்குமிடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. உடனடியாகப் போலீசு ஐ.ஜி.-யும், கமிஷனரும் அங்கு சென்று அமைதி நிலைநாட்ட முயன்றனர். நிமிடத்துக்கு நிமிடம் நிலைமை மோசமடைந்துகொண்டிருந்ததாகச் செய்தி வந்துகொண்டிருந்தது.

இரவு 3-மணிக்கு, அமைச்சர்கள் மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, முத்துசாமி ஆகியோர் அந்த இடத்துக்குச் சென்று, தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்; 'நடந்தவை பற்றி விசாரணை நடத்தப்படும்' என்றும், 'தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது' என்றும் கூறி, அமைதி காக்குமாறு வேண்டிக் கொண்டனர். எனினும், 'தாக்கிய மாணவரை உடனடியாகத் தண்டிக்க வேண்டும்' என்று தொழிலாளர்கள் வலியுறுத்தினர்; அவர்களுக்கு, அமைச்சர்களின் சமாதானம் திருப்தியளிக்கவில்லை.

அடுத்து மருத்துவக் கல்லூரி விடுதியிலும், கலைக் கல்லூரி விடுதியிலும் கைகலப்புகள் ஏற்பட்டன. போலீசு ஐ. ஜி.-யும் கமிஷனரும் விரைந்து அமைதி நிலை நாட்ட முனைந்தனர். தடியடியும், கண்ணீர்ப் புகை வீச்சும் செய்தும் பலன் ஏற்படவில்லை.

அதன் பிறகு, இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களான திரு. வி. கே. கோதண்டராமனையும், திரு. கோவிந்தராசனையும் அனுப்பி, தொழிலாளர்களை அமைதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது; அவர்களும் எவ்வளவோ திறமையுடன் அமைதி ஏற்படுத்த முயன்றனர். அதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய வேண்டுகோளையும் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில், நிலைமை சீர்பட இந்த அரசு மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளுக்கும் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்குமாறு இந்த மன்றத்தில் உள்ள உங்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

அமைதியும் நீதியும் நிலைநாட்ட எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதுடன், சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்தவும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, பகல் 12 மணிக்கு கட்சித் தலைவர்களெல்லாம் கூடிப்பேசி, ஒரு கூட்டான வேண்டுகோள் விடுப்பது நல்லது என்று எண்ணியுள்ளேன். எனவே, எல்லாக் கட்சித் தலைவர்களையும், உரிய யோசனைகளைத் தெரிவிக்க வேண்டுகிறேன்."

நிர்ப்பந்த நிலை குறைந்ததால்!

சென்னை, மார்ச் 25—

"அமைச்சர்கள் சுற்றுப்பயணம் பற்றி பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டன. 'பணம் செலவாகிறது' என்பது சரியல்ல; அது, தவறான வாதமாகும். 20 ஆண்டுக் காலம் நாட்டை ஆண்டு அனுபவம் உள்ளவர்களுக்கு வேண்டுமானால், சுற்றுப்பயணம் செய்யாமலே நாட்டின் நிலைமையை அறிந்துகொள்வதற்கு வசதிகள் இருந்திருக்கலாம்; ஆனால், புதிதாகப் பதவி ஏற்றுக்கொண்ட எங்களுக்கு, நாடெங்கும் உள்ள மக்களின் குறைகள்-தேவைகள் ஆகியவற்றை நேரடியாக அறிந்து கொள்வதற்கு, சுற்றுப் பயணம் மிக்க அவசியமாயிற்று! ஆனால் இனி அது குறையலாம்; நாங்கள் பதவியேற்று இரண்டாவது ஆண்டாக இருப்பதால், முதலாவது ஆண்டில் இருந்த நிர்ப்பந்த நிலை குறையும். அதன் மூலம், சுற்றுப் பயணமும் குறையும் என்று கருதுகிறேன்."

--முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்றத்தில்)

சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

முதலமைச்சர் அண்ணா அறிக்கைக்குப் பிறகு திரும்பப் பெறப்பட்டன

சென்னை, மார்ச் 26—

"அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் — மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பு -- அமளி குறித்து விவாதிப்பதற்காக, இன்றைய சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கவேண்டும்"

என்று, இன்று சட்டமன்றத்தில் கோரிக்கைகள் கொடுக்கப்பட்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி.ஜி. கருத்திருமன், இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன், காங்கிரசு உறுப்பினர் திரு. இராமச்சந்திர துரை, சுதந்திரக் கட்சி உறுப்பினர் திரு. போஜன் ஆகியோர் இந்தக் கோரிக்கைகளைக் கொடுத்திருந்தனர்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், வெளியிட்ட உருக்கமான அறிக்கைக்குப்பிறகு, அரசு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளின் மீது நம்பிக்கை வைத்துத் தங்கள் கோரிக்கைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக இவர்கள் அனைவரும் தெரிவித்துக்கொண்டனர்.

உதகை இரயில் பாதை 'பிழைத்து விடும்'

'இலாபகரமாக இல்லை' என்பதற்காகத் தமிழகத்தில் உள்ள நான்கு மார்க்கங்களை எடுத்து விடுவது என்ற மத்திய இரயில்வேத் துறையின் நடவடிக்கையிலிருந்து, உதகை—மேட்டுப்பாளையம் இரயில் பாதை மட்டும் 'தப்பி'விடும் என்ற நிலைமை தெரிகிறது!

மாநிலங்களவையில் உறுப்பினர் ஒருவருக்குப் பதிலளிக்கையில் இரயில்வேத் துறைத் துணை அமைச்சர் பரிமல் கோஷ், 'உதகை இரயில் பாதையை எடுத்துவிடும் நிலை பிறக்காது என நம்புகிறேன்' என்ற அளவில் உறுதி அளித்திருக்கிறார்.

"நான்கு மார்க்கங்களையும், குறிப்பாக 'உதகை-மேட்டுப்பாளையம் பாதையை எடுத்துவிடுவது' என்ற முடிவு பொருந்தாதது—தவறானது' என்றவகையில் சுட்டிக் காட்டித் தமிழக அரசு, மத்திய அரசுக்குக் குறிப்பு அனுப்பியதும், சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று வந்து விவாதிக்கப் பட்டிருப்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

சிவசேனையின் புதிய போராட்டம்!

"பூனா பகுதியிலுள்ள எல்லா ஓட்டல்களும் உணவுப் பொருள்களின் விலையினை 25 சதவிகிதம் உடனடியாகக் குறைக்கவேண்டும்; இல்லையேல், இன்னும் நான்கு நாட்களுக்குள் சிவசேனையினர், ஓட்டல்கள் முன்பாக அமைதிப் போராட்டம் நடத்துவார்கள்"

என்றதோர் அறிவிப்பினை, கடந்த திங்கட்கிழமையன்று பூனா சிவசேனையினர் அறிவித்துள்ளனர்.

"பொதுமக்களின் நன்மையைக் கருதி மாராட்டிரத்தில் உள்ள பெரும் பகுதி உணவு விடுதிகள் விலைகளைக் குறைத்திருக்கின்றன; ஆனால், பூனாவில் இந்த அளவுக்கு விலைகள் உயர்ந்திருப்பது எந்த ஒரு நகராட்சி உறுப்பினருக்கும் தெரியாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது"

என சிவசேனையினர், பூனாவில் உள்ள நிலைமைகள்பற்றி மேலும் தெரிவித்திருக்கின்றனர்.

கழக ஆட்சியில் தொழில் வளர்ச்சி மந்தமா?

மத்திய அரசு கொள்கைக்கேற்பவே இங்கு நடவடிக்கை எடுக்கப்படும்

சேலம் உருக்காலையை நிறுவ எல்லா முயற்சிகளும் செய்யப்படுகின்றன

தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 22—

"சேலம் உருக்காலையை நிறுவுவதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது; 'இதற்கு லைசென்சு தாருங்கள்' என்று மத்திய அரசுக்குத் திரும்பத் திரும்ப எழுதியும் அதற்கு இதுவரையில் எந்தப் பதிலும் அவர்களிடமிருந்து வரவில்லை! இந்திய அரசிடமிருந்து 'லைசென்சு' வந்தபின் எந்தத் துறையில் இதனை ஆரம்பிப்பது என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

"தமிழகத்தில் மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது; இதில் இரண்டு தொழிற்சாலைகள் வடாற்காடு மாவட்டத்திலும், ஒரு தொழிற்சாலை கோவை மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்படும். நட்டத்தில் நடந்துவரும் சர்க்கரை ஆலைகளையும், நூற்பு ஆலைகளையும் எப்படிச் சீர்படுத்தலாம் என்ற முயற்சியையும் அரசு மேற்கொண்டிருக்கிறது.

"வேறு சில துறைகளில் நாம் சுதந்தரமாகத் திட்டமிட்டுக் காரியங்களைச் செய்வதுபோல தொழில் துறையில் செய்ய முடியாது. இந்திய அரசின் கொள்கைக்கு ஏற்பத்தான் தமிழகத்திலும் தொழில் வளர்ச்சி ஏற்படும்!

"தொடர்ந்து வறட்சி நிலை நிலவியதால்தான் சென்ற இரண்டு ஆண்டுகளாகத் தொழில் வளர்ச்சி பெற முடியவில்லை; இதனால் மக்களின் வாங்கும் சக்தியும் வளரவில்லை; உற்பத்தியும் பெருகவில்லை.

"இந்தியாவிலேயே 1966—67-ல் 2.7 சதவிகிதம் உற்பத்திப்பெருக்கம்தான் ஏற்பட்டிருக்கிறது; இந்த நிலையிலும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

"இந்த அரசு பதவிக்கு வந்த சென்ற ஓராண்டில், 'ஏற்பட விருந்த தொழிற்சாலைகளைத் தடுத்திருக்கிறது' எனச் சொல்ல முடியாது; ஏற்படுகின்ற தொழிலுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு இந்த அரசு உதவி செய்துவந்திருக்கிறது.

"தமிழ்நாட்டில் 1966-ம் ஆண்டில் 11 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன; 1967-ம் ஆண்டில் 13 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன; சிறு தொழில்கள் பதிவு செய்து கொண்டதிலும், சென்ற ஆண்டைவிட 18 சதவிகிதம் இந்த ஆண்டில் அதிகமாகும்"

இவ்வாறு தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் தொழில்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

மத்திய அரசின் அனுமதிகிடைத்தால்...

பல்வகை செயற்கை நூல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 10 கோடி மூலதனத்தில் இங்கு நிறுவுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது; வரும் ஆண்டிலேயே இத்தொழிற்சாலையைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரூ. 10 கோடி மூலதனத்தில் மின் அணுக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நமது மாநிலத்தில் நிறுவ வேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்திக் கேட்கப்பட்டிருக்கிறது. இத் தொழிற்சாலை இங்கு நிறுவப்பட்டால் 3,500 பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள்.

கனரகத் தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்திய தொலைபேசித் தொழிற்சாலையின் இரண்டாவது யூனிட்டை தமிழகத்தில் நிறுவுமாறு மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

நெய்வேலி நிலக்கரி துணைப் பொருள்களைப் பற்றியும், மணலி சுத்திகரிப்பு ஆலை துணைப் பொருள்கள் பற்றியும் ஆய்வு செய்து அவற்றைக்கொண்டு ஏதேனும் செய்யமுடியுமா என்று அறிக்கை அளிக்கும்படி 'எஞ்சினியர்ஸ் இந்தியா' நிறுவனத்தை அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது; அவர்களுடைய அறிக்கை கிடைத்ததும் இயலக்கூடிய தொழிற்சாலைகளை நிறுவ அரசு திட்டமிட்டிருக்கிறது."

முதல் எழுத்துக்கள் தேர்தல் முழக்கமாகின்றன!

அதிபர் ஜான்சன் பெற்றுள்ள இயற்கைச் சாதகம்!

சூடு பிடித்துவரும் அமெரிக்கத் தலைவர் தேர்தலில், போட்டியாளரில் ஒருவராக இருக்கும் தற்போதைய அதிபர் லிண்டன் பி. ஜான்சனுக்கு, அவரது பெயரில் உள்ள முதல் மூன்று எழுத்துக்களே ஒரு தேர்தல் முழக்கமாகி இருக்கிறது!

லிண்டன் பி. ஜான்சன் என்ற பெயரில் உள்ள முதல் மூன்று எழுத்துக்களான எல். பி. ஜே. என்பது அவரது பெயரின் சுருக்கமாகும்; அந்த மூன்று எழுத்துக்களான எல். பி. ஜே. என்ற எழுத்துக்களையே 'லெட்டஸ் பேக் ஜான்சன்—(Let's Back Johnson)—'ஜான்சனை ஆதரிப்போம்'—என்ற முக்கிய முழக்கம் ஒன்றின் அவரது ஆதரவாளர்கள், தேர்தல் பிரச்சாரத்தில் அறிமுகப்படுத்தி இருக்கின்றனர்!

தொழிலகங்களை நகருக்கு வெளியே அகற்றவேண்டும்

சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா யோசனை

சென்னை, மார்ச் 25—

நடைபாதைவாசிகளுக்கு மாற்றுக் குடியிருப்பு வசதி அளிப்புப் பற்றிய கேள்விக்கு அமைச்சர் செ. மாதவன் பதிலளிக்கையில், காங்கிரசு உறுப்பினர் சே. விஜயகம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டுப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"நடைபாதை வாசிகள்—குடிசைப் பகுதிகள் பிரச்சினை, சென்னை நகரில் மட்டுமில்லை; எல்லா நாடுகளிலும், பெரிய நகரங்களில் இந்தப் பிரச்சினை இருந்துவருகிறது. நடைபாதையில் வசிப்பவர்களை அப்புறப்படுத்தினால் மீண்டும் அந்த இடத்தில் வேறு புதியவர்கள் வந்து வசிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்; எனவே, இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு உள்ள வழி, நகரின் மத்தியிலே மக்கள் நெரிசலுக்குக் காரணமாக உள்ள தொழிலகங்களையும், வியாபார நிறுவனங்களையும் நகருக்கு வெளியே கொண்டு செல்வது தான்."

அரங்கண்ணல்:—"நடைபாதையில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, முன்னைவிட இப்போது குறைந்திருக்கிறது என்பதை அரசு அறியுமா?"

அண்ணா:—"கட்சிகள் மாறி மாறி அரசுப் பொறுப்பேற்கும் சனநாயகத்தில், 'முன்னைவிட இப்போது குறைந்திருக்கிறது' என்ற இந்த உண்மையை முன்னாள் ஆட்சியாளர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை."

நாட்டு மருந்து முறைக்குத் தனி இயக்குநர்

சென்னை, மார்ச் 25—

"இந்திய மருத்துவத்துக்கெனத் தனி இயக்குநர் ஒருவரை நியமிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது; மாவட்ட மருத்துவ மனைதோறும் சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்துவது குறித்தும் அரசு ஆராய்ந்து வருகிறது"

என்று, சுகாதாரத்துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"இந்திய மருத்துவத் துறையில், சித்த—ஆயுர்வேத—யுனானிஆகிய மூன்று மருத்துவ முறைகளும் அடங்கும்" என்றார் அமைச்சர்.

ஏழைகளுக்கு வீட்டு மனை

கழக அரசின் ஓராண்டுச் சாதனை!

மதுராந்தகம், மார்ச் 24—

"ஓராண்டில் 30,000 ஏக்கர் நிலங்களுக்குப் 'பட்டா'க்கள் வழங்கப்பட்டுள்ளன; இதனால் 17,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

"ஒவ்வோர் ஆண்டும் 50,000 ஏக்கருக்குப் 'பட்டா'க்கள் வழங்கி உணவு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது"

என்று உணவுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், குளத்தூரைச் சுற்றியுள்ள 6 கிராமங்களைச் சேர்ந்த 192 பேருக்கு, வீட்டு மனைகளுக்கான 'பட்டா'க்களை வழங்கிப் பேசுகையில் தெரிவித்தார்.

விழாவிற்கு, குளத்தூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் எம். கோபால் தலைமைதாங்கினார்.

கலெக்டர் திரு. இலட்சுமிகாந்தன் வரவேற்றார்.

"செங்கற்பட்டு மாவட்டத்தில் 32,000 டன் அரிசி கொள்முதலாகி இருக்கிறது"

என்றும் அமைச்சர் கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

'இந்தி நகராகிறது' இந்தியத் தலைநகர்

ஆக. 15 முதல் அனைத்தும் இந்தியில்

சட்டத்துக்குப் புறம்பான மொழி வெறி!

"வருகிற ஆகஸ்டு 15-ம் நாள் முதல் தனது அலுவல்கள் அனைத்தையும் இந்தி மொழியில் மட்டும் நடத்தவிருக்கும் டெல்லி ஆட்சிப் பகுதியின் நடவடிக்கை சரியானதுதானா" என்பது பற்றிய சட்டப் பிரச்சினை ஒன்றில், மத்திய அமைச்சரவையின் உள்விவகாரத்துறை, ஆழ்ந்து சிந்தித்து வருகிறது!

தனது முடிவு, 'அரசியல் சட்டப்படி சரியானதே' எனக் கருதும் டெல்லி ஆட்சிக் குழுவின் அதே முடிவினை, 'சட்டத்துக்குப் புறம்பானது' என வாதிடுகிறார் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர்!

குமாரி சுந்தர் செய்னி என்ற அந்தக் காங்கிரசு உறுப்பினர் இது பற்றிக் கூறியிருப்பதாவது:—

"ஆட்சி மொழிச் சட்டப்படி, மத்திய அரசின் அலுவல் மொழியே மத்திய ஆட்சிப் பகுதி (டெல்லி)யின் அலுவல் மொழியாகவும் இருக்க வேண்டும்.

"ஆட்சி மொழிச் சட்டம் எப்படி இருக்கவேண்டும் என்று —தனது விருப்பத்துக்கிணங்க—சட்டம் இயற்றும் உரிமை, மாநிலச் சட்ட மன்றங்களுக்கு மட்டுமே உண்டு (மத்திய ஆட்சிப் பகுதிகளுக்கு இல்லை.)

"எனவே, 'தனது அலுவல் மொழி இந்தி மட்டுமே' என்ற முடிவினை, டெல்லி ஆட்சிப் பகுதி சட்டம் இயற்றித் தெரிவித்துக் கொண்டிருப்பது, 'செல்லுபடியானதல்ல' என்பதுடன், நியாயமானதும் அன்று!

"ஏனெனில், 'இந்தியத் தலைநகர்' என்ற முறையில், புதுடில்லியில் எல்லா மொழிக்காரர்களும் வந்துபோய்க்கொண்டும், தங்கியும் இருக்கும் நகரம் அது! (அங்கே இந்தி மட்டுமே அலுவல் மொழி என்பது சரியானதல்ல!)"

காதில் விழுந்தது!

"சென்னை, தமிழகத்தின் தலைநகர்தானே?"

"ஆமாம்."

"புதுடில்லி?"

"இந்தியாவின் தலைநகர்!"

"இரண்டு இடங்களுக்கும் எல்லா மொழிக்காரர்களும் வருவார்கள்; ஆனால் எந்த நகருக்கு அதிகமாக வருவார்கள்?"

"புதுடில்லிக்கு."

"சரி; இது அப்படியே இருக்கட்டும்; முன்பு, 'தமிழக அரசுப் போக்குவரத்து' என்ற இலச்சினைக் கொண்ட பெயரை மட்டும் தமிழில் எழுதியதற்கு இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள் என்ன கூறினர்கள்?"

"நாலு பேர் வந்து போகிற இடம்; தமிழில் மட்டும் இருந்தால் மற்ற மொழிக்காரர்கள் எப்படிப் புரிந்துகொள்ளுவார்கள்" என்று கேட்டார்கள்!"

"தமிழில் எழுதியது, பெயரை மட்டுந்தான்—பொதுமக்களுக்கான அறிவிப்புக்களை அல்ல! அறிவிப்புகளெல்லாம் ஆங்கிலத்திலும் இருக்கிறது! பெயரை மட்டும் தமிழில் எழுதியதற்கு, 'புரியுமா மற்ற மொழிக்காரர்களுக்கு?' என்று கேட்டார்கள்—அப்படித்தானே?"

"ஆமாம்."

"உன்னுடைய பெயரென்ன?"

"விநயகம்."

"சரி; நீ மற்ற மொழிக்காரர்களிடம் பேசியது உண்டா?"

"பழகியுமிருக்கிறேன்."

"அவர்களெல்லாம் உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிறார்களல்லவா?"

"ஓ! பெயர் சொல்லிப் பழகியிருக்கிறார்கள்"

"உன் பெயரின் பொருளைப் புரிந்து கொண்டா?"

"இல்லை; என் பெயர் 'விநயகம்' என்பது தெரியும்; பொருள் தெரியவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லையே!"

"அப்படித்தான் இங்கே சில பெயர்களை மட்டும் தமிழில் எழுதியது; 'தமிழக அரசுப் போக்குவரத்து' என்பதனை ஆங்கிலத்தில் எழுதாததை, பெரியதோர் விமர்சனமாகப் பேசினார்களல்லவா? இப்போது புதுடில்லியில்—அதாவது இந்தியத் தலைநகரில்—என்ன செய்யப் போகிறார்களாம் தெரியுமா? அலுவல் மொழியையே இந்தியில் மட்டுந்தான் கடைபிடிக்கப்போகிறார்களாம்!"

"புதுடில்லி, பல மொழிக்காரர்கள் வந்து போகின்ற இடம் என்பதுடன், வெளிநாட்டுக்காரர்களும் வந்து சென்றும், தங்கியும் இருக்கின்ற இடமாயிற்றே?"

"இருந்தால் என்ன? வருகிற ஆகஸ்டு 15-ந் தேதி முதல் இந்தியில் மட்டும்தான் எல்லாம்! இந்தியத் தலைநகர், இந்தியர்களுக்காக அன்று; 'இந்தி'யார்களுக்காக மட்டுந்தான்!"

"இது என்ன வேடிக்கை?"

"வேடிக்கை என்று சொல்லாதே! விபரீதம்! 'இந்தியாவின் ஆட்சிமொழி எது' என் பதிலேயே இன்னும் எல்லாப் பகுதியினரின் ஒப்புதலையும் பெற முடியவில்லை! அதற்குள் இந்தியத் தலைநகரின் ஆட்சிமொழியாக இந்தியை மட்டும் அமர்த்தப் போகிறார்களாம்! பார்ப்போம்—அங்கே உள்ள அமைச்சர்களிலேயே எத்தனைப் பேருக்கு இது சங்கடமாய் இருக்கப் போகிறது என்பதை!"

—எஸ். ஆர்.

அமெரிக்கா செல்லாமலே அறிந்துகொள்ள வேண்டிய பாடம்

நமது சமுதாயத்தைத் திருத்தியமைப்பதாகும்

ஏழைகளுக்கு நல்வாழ்வு---தமிழக அரசு காட்டிடும் ஆர்வம்---
முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, மார்ச் 24—

“ எழில் பூத்துக் குலுங்கும் சென்னை நகரில் குடிசைப் பகுதிகள் தீ விபத்தாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு, ஆற்றுவாரற்று இருப்பதை நாம் உணர வேண்டும்; கூடுமானவரையில் குடிசைப் பகுதிகளை நீக்கிவிட்டு, நல்ல முறையில் வீடுகளை அமைப்பதில் உங்கள் முயற்சி பலனளிக்க வேண்டும்.

“ நம் நாட்டைப் பொறுத்தவரையில் கேட்கவேண்டியவர்கள் கேட்க வேண்டிய முறையில் கேட்டால், ஏழை எளியவர்கள்கூட இயன்ற அளவு தருவார்கள்! ஒன்றுக்குக் கேட்டு வாங்கி அதை வேறொன்றுக்குப் பயன்படுத்தி, யாரேனும் அதுபற்றிக் கேட்டால், ‘நீ யார் கேட்பதற்கு?’ என்று சிலர் கூறுவதால்தான், மக்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறது!

“ தீ விபத்திற்காக வசூலிக்கப்பட்ட 36 இலட்சம் ரூபாயில் பல இடங்களில் வீடுகள் கட்டியுள்ளோம். விரைவில் நான்கு அடுக்கு மாடிக்கட்டிடம் ஒன்று மவுண்ட்ரோடில் கட்டப்பட இருக்கிறது. அழகுமிக்க அந்தக் கட்டிடங்களையெல்லாம் பார்க்கும்போது, ‘இது நாம் கொடுத்த பணம்’ என்று நிதி கொடுத்த ஒவ்வொருவரும் பெருமையடையலாம்.”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், இராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற விழா ஒன்றில் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்கள்.

இன்று மாலை 6-30மணியளவில் சென்னை நகர் குடிசைத் தீ விபத்து நிவாரணக் குழுவின் சார்பில் இதுவரை வசூலிக்கப்பட்ட 1 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய்க்கான இறுதிக்காசோலை அளிப்பு விழா, கடற்கரை சாலையிலுள்ள இராணி மேரிக கல்லூரித் தென்புறப் பூங்காவில் நடைபெற்றது.

செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், இந்த காசோலையை, முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் அளித்தார்கள்.

காசோலையைப் பெற்றுக்கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது :—

“சென்னையிலே ஏற்பட்ட தீ விபத்தையொட்டித் தமிழகத்திலுள்ள மக்களின் கருணை உள்ளத்தை, நாடு போற்றத்தக்க வகையில் நாம் உணர்ந்திருக்கிறோம்; அதிலும் குறிப்பாக, கல்லூரி மாணவர்கள்—கலைஞர்கள்—தொழில் துறையிலுள்ளவர்கள் காட்டிய ஆர்வம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதுவரையில் தீ விபத்து நிதிக்காக ரூ. 36 இலட்சத்திற்குமேல் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏதேனும் ஒன்று நடந்து விட்டதென்றால், தமிழகம் முழுவதும் அதற்கு உறுதுணைபுரிய முன்வருகிறது. இத்தகு தமிழ்ப்பண்பாட்டை தொன்றுதொட்டு நாம் கண்டு வந்திருக்கிறோம்.

அதிலும், கலைத் துறையிலுள்ளவர்கள் பல ஆண்டுகளாக முழு ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அவர்கள் ஈடுபடாத நிகழ்ச்சி எதுவுமில்லை. அந்த முறையில் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட முதலாளிகளும் தங்கள் படங்களைத் திரையிட்டு உதவினர்.

இவற்றையெல்லாம்விடப் பள்ளி மாணவர்களும், சிறுவர்களும் தங்களால் இயன்றதை 20 காசு 30 காசு என்று நெஞ்சு உருகத்தக்க விதத்தில் கொடுத்த நிகழ்ச்சியை நம்மால் என்றும் மறக்க முடியாது!

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், கல்விக்கூடத்தில் பணியாற்றுபவர்கள் இதில் காட்டிய அக்கறைதான் இதற்கு உறுதுணையாக அமைந்தது!

சமுதாய அமைப்பைத் திருத்தி அமைக்க முயலுவேன்

நான் அமெரிக்கா செல்வதைப் பற்றி கல்லூரி முதல்வர் குறிப்பிட்டார்.

அமெரிக்க நாடு செல்வச்செழிப்பு மிகுந்த நாடு; அந்த நாட்டின் தனிச் சிறப்பியல்புகளை ஆராய்ந்து, ‘அதுபோல் நம் நாட்டில் எவ்வெவற்றைப் புகுத்தலாம்’ என்று தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து புகுத்துவேன் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

நம் நாடு, பழம்பெருமை வாய்ந்த நாடு; மக்கள் தொகை வளர வளர, இங்குள்ள பொருளாதாரச் செல்வம் போதுமானதாக இல்லை!

அமெரிக்க நாட்டிலுள்ள இயற்கைச் செல்வங்கள்—அங்குள்ள நிலப்பரப்பு—செல்வ அமைப்பு ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அங்கு செல்லாமலேயே நாம் ஒரு பாடத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்; அது, நமது சமுதாய அமைப்பைத் திருத்தியமைக்கும் பாடந்தான்.”

அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவை

செயற்குழுமீதுநம்பிக்கை உறுதி செய்யப்பட்டது

சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவைக் கூட்டம் 20—3—68-ல் கிண்டி பொறியியற் கல்லூரிப் பேரவை அரங்கில் நடைபெற்றது; அனைத்துக் கல்லூரி பேரவை அரங்கில் நடைபெற்றது.

அனைத்துக் கல்லூரி மாணவர் தலைவர் இரா. சனார்த்தனம் தலைமைவகித்தார்.

1967—68-க்கான பேரவையின் வரவு-செலவுக் கணக்குகள் வாசிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பேரவையின் செயற்குழு மீது நம்பிக்கை தெரிவித்துக் கீழ்க்கண்ட மாணவத் தலைவர்களால் கையெழுத்திட்டுத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தியாகராயர் கல்லூரி மாணவர் தலைவர் உடையார், கிண்டி பொறியியற் கல்லூரித் தலைவர் யாகியா, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மாணவச் செயலாளர் ச. டொமினிக் சுவாமிநாதன், அரசினர்

(5-ம் பத்தி பார்க்க)

‘சுரதா’

[ஆண்டுச் சந்தா: ரூ. 6: 32, வி. ஜி. கார்டன் முதல் தெரு, சென்னை-28.]

‘ஏடொன்று வேண்டும்’ என்று கேட்ட தோழர்களுக்கு, தீமையை விரைந்து தாக்க—நன்மை செய்தலே நோக்கமாகக் கொண்டு—தனது பெயரினையே தலைப்பாகத் தந்து—கவிதை இதழொன்றை கொண்டுவந்திருக்கிறார், கவிஞர் சுரதா அவர்கள்!

முதல் இதழிலேயே, ‘முதல் உணர்ச்சி எது’ என்ற கேள்வியைக் கேட்டு, அதற்கு அவர் பதிலாகத் தந்துள்ள கவிதை வரிகள்—

“ மொழி புணர்ச்சி ஒளினத்தின்
முதலுணர்ச்சி யாகும் ”

என்ற உண்மையினை, உணராத சிலருக்கும் உணர்த்துவதாக உள்ளது.

‘இலக்கியத்திலும் செய்திகளைத் திரட்டலாம்—தரலாம்’ என்ற முயற்சியில், இதுவரையில் வெளிவந்துள்ள கவிதை இதழ்களிலேயே சுரதாவின் ஏடுதான் முதலாவதாக இருக்கமுடியும்.

சொல் நயம் உள்ள—உவமை அல்லது கருத்து நயம் படைத்த கவிதைகளை மட்டும் தரும் பத்திரிகைகள் வந்திருக்கக்கூடும்; ஆனால், தமிழ்ப் புலமை மிக்கவர்களும் அறியாத பழைய செய்திகளைத் தேடித் துருவி—ஆராய்ச்சிக்குரிய வகையில் கவிதையாகத் தந்திருக்கும் சுரதாவின் உழைப்பு, நன்றிக்கு உரியதாகும்.

சே. ப. நரசிம்மலு நாயுடு என்பவர் யார் என்பது, புலவர்களில் கூடப் பலருக்குத் தெரிந்திராத பெயராக இருக்கலாம்; ஆனால், 1885-ம் ஆண்டே தமிழில் முதன் முதல் தரைச் செலவு பற்றிப் ‘பயண நூல்’ எழுதிய பன்மொழிப் புலவர்—என்ற செய்தியினை, ஒரு கவிதை ஏட்டில் தெரிந்துகொள்வதற்கு வழிவகை செய்திருக்கிறார் சுரதா! இதே முறையில், தமிழ்ப் பெரியார்களின் கையெழுத்தினை அச்சினில் வடித்துக் காட்டியிருக்கும் இதழாசிரியரின் முயற்சியும் புதுமையானதே!

‘வாழ்க்கை வட்டம்’ என்னும் பகுதியில், இதுவரை வந்திருக்கும் ‘அம்மைச்சி’யும், ‘நெல்லூர் நிகழ்ச்சி’யும் நம்முடைய நினைவை விட்டு நீங்காதவைகளாக இருக்கின்றன!

சேகரித்துத் தந்திருக்கும் ‘ஒங்கு தமிழில் உருதுச் சொற்கள்’—‘சிலப்பதிகாரத்தில் காணப்படும் மாதர் அணிகள்’ ஆகியன, தேன் கூட்டுக்குச் சமமான உழைப்பினையும் பயனையும் கொண்டவைகளாகும்.

முத்திரைக் கவிதைக்கு உரிய சின்னமாகப் பாரதிதாசனை, சுரதா தேர்ந்தெடுத்திருப்பது, தனக்குப் பெயர் கொடுத்துப் பெருமைதந்த ஆசானுக்குக் காட்டியுள்ள நன்றியுணர்வாக இருக்கிறது.

‘வில்லுப் பாட்டு’ப் பகுதியில் சுப்பு ஆறுமுகத்தின், ‘எங்கள் அண்ணா’, ‘எங்கள் கலைஞர்’ என்ற இரு பாடல்களும்—இசையாலும் எளிமையாலும் - படித்தோரையும் பாமரரையும் கவரும் வண்ணம் இருக்கின்றன.

‘வாழ்க்கை வட்டம்’—‘முன்னும் பின்னும்’—‘முத்துப் பந்தல்’—‘முத்திரைக் கவிதை’—‘தோரண வாயில்’—‘வார்த்தை வாசல்’—‘கட்டுச் சோறு’—‘சுவரும் சுண்ணாம்பும்’—‘ஓலை உலகம்’—‘மறுபிறப்பு’ என்பனவெல்லாம், வந்துள்ள கவிதைத் தலைப்புக்களல்ல—கவிதைப் பகுதிகளுக்கான தலைப்புக்களாகும்! இது ஒன்றிலேயே அவரது கைவண்ணம் மிளிருகிறது—கருத்தாழம் தெரிகிறது!

‘கவிதை ஏடு’ என்பதனை, இதனைப் பதிப்பித்து வெளியிடும் அச்சகத்தினர் உணர்ந்திருக்கின்றனர் என்பது, பக்கத்துக்குப் பக்கம் அமைந்துள்ள எழிலிலிருந்து தெரிகிறது; ஏனெனில், அத்துணைத் தெளிவு காணப்படுகிறது.

ஏட்டின் மூலம் அவர் ஆரம்பித்துள்ள பணி, இதழினை வாங்குபவர்கள் காட்டும் கடமை உணர்ச்சியின் மூலம்தான் சிறப்புப் பெறும்! —எஸ். ஆர்.

‘அறிவுச்செல்வத்தில்எந்நாட்டிற்கும் குறைந்ததல்ல நம் நாடு’

‘மருத்துவத்துறை வல்லுநர்கள் இதனை மெய்ப்பிக்கின்றனர்’

‘தங்களைத் தாங்களே தியாகம் செய்துகொண்டவர்கள்---தியாகப் பரம்பரையில் வந்தவர்கள்’---சமுதாயத் தொண்டாற்றும் மருத்துவர்களுக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா பாராட்டு

சென்னை, மார்ச் 23—

“ மக்கள் தொகை அதிகம் வளர்ந்துவரும் நம் நாடு, உலகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள முற்போக்கு நாடுகளுடன் எல்லாத் துறைகளிலும் போட்டியிடுகிறது! பொருட்செல்வத்தில் குறைந்திருக்கிறதே தவிர, அறிவுச் செல்வத்தில் எந்த நாட்டிற்கும் நம் நாடு சளைத்ததல்ல! அதை மருத்துவத்துறை வல்லுனர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்!”

“ மருத்துவத் துறைக்கு முக்கியமானது அன்பும், கனிவு உணர்ச்சியுமாகும்; இந்த உணர்வு சமூகம் முழுவதும் பரவவேண்டும்; இத்துறையில் ஈடுபட்டவர்கள் அதிக வருவாய் பெற முடியாவிட்டாலும், பல துறையில் உள்ளவர்கள் அடைய முடியாத கீர்த்தியைவிட—சிறப்பை விட, நோயுற்று நலிந்தவர்களெல்லாம், ‘டாக்டர்; நான் பிழைத்துவிட்டேன்’ என்று கூறுவதைக் கேட்கும்போது உதட்டின் ஓரத்தில் புன்னகை நெளிகிறதே மருத்துவர்களுக்கு —அதைவிட வருவாய் தரும் இன்பம் பெரிதாக இருக்க முடியாது!

“ மற்றவர்களைவிட சமுதாயத்திற்காகத் தொண்டாற்றுபவர்கள் மருத்துவர்கள்தான்!”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னை மருத்துவக் கல்லூரியில், 1966—67-ம் ஆண்டில் பல்வேறு துறைகளில் வெற்றிபெற்ற மருத்துவக் கல்லூரி மாணவ – மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கி ஆற்றிய உரையில் குறிப்பிட்டு விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது :—

“நம் நாடு, இல்லாமை—போதாமை நிறைந்த நாடு; செல்வச் செழிப்பு மிகுந்த நாடு அல்ல!

“சுத்தமான உணவு, நல்ல காற்றோட்டம் ஆகியவை இருந்தால் எந்த நோயும் வராது” என்பார்கள்!

நம் நாட்டில், 100-க்கு 70 பேருக்கு மேல் இடவசதி இல்லாமல்—நல்ல காற்றோட்டம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள்!

100-க்கு 80 பேர், ‘என்ன நோய்’ என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நோயில்கிடந்து துவளுகிறார்கள்!

ஏழ்மையும் அறியாமையும் நிறைந்த இந்த நாட்டில், மருத்துவத் துறையில் பணியாற்றுவது கொஞ்சம் கடினமானதுதான்; என்றாலும், மருத்துவத் துறையில் பணியாற்றும் நண்பர்கள், அதைச் சமூகப் பணியாகவே கருதிவருகின்றனர் என்பதை நாம் மறக்க முடியாது.

நம் நாட்டில், மருத்துவர்களின் எண்ணிக்கை, ‘58 ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர்’ என்ற நிலைதான் இருக்கிறது; ‘ஓர் இலட்சம் பேருக்கு 2 மருத்துவர்’ என்ற நிலைக்குக்கூட உயரவில்லை!

இலட்சக்கணக்கான — கோடிக்கணக்கான நோயாளிகள், உடற்கட்டுப் பெற்று—நலிவு நீங்கி—உள்ளப் பாங்கு பெற்று—மகிழ்ச்சியோடு வாழ மருத்துவர்களாகிய நீங்கள் தொண்டாற்ற வேண்டும். சமூகத் தொண்டர்களாக ஈடுபட்டிருக்கும் நீங்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும்.

இந்த மருத்துவக் கல்லூரிக்கு எந்தவிதமான உதவியையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன்; இருந்தாலும், ‘மருத்துவர்களிடமும், வழக்கறிஞர்களிடமும் உள்ளதைச் சொல்ல வேண்டும்’ என்பார்கள்! மனிதர்களுக்கு நலிவு இருப்பது போல், நிதித் துறையிலும் தமிழக அரசுக்கு நலிவு இருக்கிறது! இருந்தாலும், மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், அதற்கு உதவுவதில் எந்தவிதத் தயக்கமும் காட்டமாட்டோம்!

மருத்துவத் துறையில் ஈடுபட்டவர்கள் தங்களைத் தாங்களே தியாகம் செய்துகொண்டவர்கள் ஆவார்கள்!

கலைக் கல்லூரிகளைச் சேர்ந்தவர்களாயினும்—பொறியியற் கல்லூரியைச் சேர்ந்தவர்களாயினும்—வேறு எந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களாக இருந்தாலும்—இப்பொழுது அவர்கள் பெற்றிருக்கும் வாய்ப்பு, அவர்கள் பெற்றோர்கள் பெற்றறியாத வாய்ப்பாகும்!

“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்’ என்ற வேதாந்தத் தத்துவத்தைப் பெற்றவர்கள் நாம்; ஆனால், உங்களையெல்லாம் பல்வேறு அறிவாலயங்களுக்கு அனுப்பும் பெற்றோர்கள், ‘யாம் பெறாத இன்பம் பெறுக’ என்று அனுப்பியிருக்கிறார்கள்! அத்தகைய தியாகப் பரம்பரையில் வந்தவர்கள் நாம்!”

(1-ம் பத்தி தொடர்ச்சி)

கலைக் கல்லூரி பொதுச் செயலாளர் ஏ. எல். ஆண்டியப்பன், மெஸ்டன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பொதுச்செயலாளர் எம். பெரியசாமி, ஒய்.எம்.சி ஏ.உடற்பயிற்சிக் கல்லூரி மாணவர் தலைவர் எஸ்.டி. சபாபதி: ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர் தலைவர் பொன். சூரியராசன், அச்சுத் தொழிற் கல்லூரி எம்.சலிதத், கந்தசாமி நாயுடு கல்லூரி மாணவர் தலைவர் டி. கணேசன், அரசினர் கலைக் கல்லூரி மாலை நேரக் கல்லூரி மாணவர் தலைவர் இரா. காசிநாதன். சமயந்துறை பயிற்சிக்கல்லூரி மாணவர் தலைவர் பி. கே. மோகன் மத்திய தொழிற் கல்லூரி மாணவர் தலைவர் ஆர். ஆர். சிங், திரைப்படத் தொழில் கல்லூரி மாணவர் தலைவர் எஸ். எஸ். அகமத், இரசாயனத் தொழிற் கல்லூரி மாணவர் தலைவர் கே. அப்துல் வகாப், தோல் தொழிற்கல்லூரி மாணவர் தலைவர் கே. கருணாகரன். இராணி மேரி கல்லூரி மாணவியர் தலைவி ஊர்மிளா பண்பாரி, எத்திராஜ் மகளிர் கல்லூரி மாணவியர் தலைவி துர்கா கிடோ, வெல்லிங்டன் சீமாட்டி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவியர் தலைவி சாமுவேல் பிரமிளா, புனித கிருத்துவப் பயிற்சிக் கல்லூரி மாணவியர் தலைவி சிந்தியா சாலமன், தேசியப் பயிற்சிக் கல்லூரி மாணவியர் தலைவி யு. சரசுவதி ஆகியோராவர்.

பின்னர் பேரவையின் வாக்குரிமை பெற்ற உறுப்பினர்கள், பேரவை எதிர்கோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்ட பின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரிசிக் கடையில் அமைச்சர் நடத்திய திடீர்ச் சோதனை

சட்டமன்றத்தில் கே. ஏ. மதியழகன் தகவல்

சென்னை, மார்ச் 25—

சென்ற ஆண்டில் தி. மு. க. ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாட்களுக்கெல்லாம், தாம் கோவை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, கோவை நகரில் திடீரென மூன்று பங்கீட்டுக் கடைகளுக்குச் சென்று சோதனை நடத்தியதாக, சட்டமன்றத்தில் உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

அதுபற்றி மேலும் அவர் தெரிவித்ததாவது:—

"என்னுடன் கோவை பங்கீட்டு அதிகாரியும் மாவட்டப் பங்கீட்டு அதிகாரியும் வந்தனர்; அருணாசலம், பழனிச்சாமி என்பவர்களுடைய கடைகளையும், பாதிமா பண்டகசாலையையும் சோதனையிட்டோம்; அரிசியின் தரத்தைச் சோதித்தேன்; 'கொடுக்கப்படும் அரிசியின் அளவு போதுமானதாக இருக்கிறதா' என்று அங்கிருந்த மக்களைக் கேட்டேன்; 'அரிசி மட்டுமே கொடுக்கப்படுவதால் போதவில்லை' என்று கூறினார்கள்; உடன், கோதுமையும் கொடுக்குமாறு உத்தரவிட்டேன். அந்த உத்தரவின் பேரில் 2—4—67 முதல் வாரத்திற்கு ஒரு கார்டுக்கு 400 கிராம் வீதம் கோதுமை கொடுக்கப்பட்டது; இப்போது அந்த அளவு குறைந்திருக்கக்கூடும்; ஆனால் இப்போது கோதுமையே கொடுக்கவில்லை என்பது சரியல்ல.

"பழனிச்சாமி என்பவரின் கடையில், தேதி குறிப்பிடப்படும் பதிவேடு சரியாக இல்லை; அது குறித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டேன்; அதன்பேரில் இருபது ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகப் பிறகு தகவல் கிடைத்தது.

"இதேபோல், மற்ற நகரங்களிலும் சோதனை நடத்த வேண்டும் என்பதோ, நடத்தக்கூடாது என்பதோ கட்டாயமில்லை."

நகராட்சிகள் பஸ் ஓட்ட அனுமதி

அரசி பரிசீலிப்பதாக அமைச்சர் தகவல்

சென்னை, மார்ச் 25—

"நகராட்சிப் பகுதிக்குள் நகரப் பேருந்துகளை ஓட்டுவதற்கு அனுமதி கோரி ஒரு நகராட்சி மன்றத்திடமிருந்து விண்ணப்பம் வந்துள்ளது; அதுபற்றி அரசு பரிசீலித்துவருகிறது"

என்று, இன்று சட்டமன்றத்தில், உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி தெரிவித்தார்.

காசிராமன் (காங்):—"ஏற்கனவே பொருளாதாரத் துறையில் நலித்திருக்கும் நகராட்சிகள், எவ்வளவுதான் 'ஓவர்லோடு' ஏற்ற அனுமதித்தாலும், நட்டத்தைத் தவிர்க்க முடியாத நிலையில் உள்ள நகர பஸ்களை ஓட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்குப்பதிலாக, அரசே நகர பஸ்களை ஓட்ட முன்வருமா?"

அமைச்சர்:—"மாண்புமிகு உறுப்பினரின் கருத்தும் சேர்த்துப் பரிசீலிக்கப்படும்."

கேள்வி:—"பஸ் ஓட்ட அனுமதி மதி கோரியிருக்கும் அந்த ஒரே நகராட்சி எது?"

பதில்:—"காஞ்சிபுரம் நகராட்சி மன்றம்தான்."

கேள்வி:—"ஊராட்சி ஒன்றியங்களும் பஸ்களை ஓட்ட அனுமதி வழங்கப்படுமா?"

பதில்:—"முதலில் நகராட்சி மன்றங்கள் பஸ் விடுவது பற்றி ஆராய்ந்து அனுமதிக்கப்பட்டபின், ஊராட்சி ஒன்றியங்கள் பஸ் ஓட்டுவது பற்றி அவசியமானல் பரிசீலிக்கப்படும்."

முன்னாள் முதலமைச்சர் வீட்டுக்குப் போலீசுப் பாதுகாப்பு

சட்டமன்றத்தில் கேள்வி-பதில்

சென்னை, மார்ச் 25—

"முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் இல்லத்தில் இருந்த பெயர்ப் பலகையை 1967 ஆகஸ்டு திங்களில் சிலரால் அகற்றப்பட்டது உண்மை; அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு, இனி அவ்விதம் நிகழாவண்ணமிருக்கத்தக்க போலீசுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது."

என்று சட்டமன்றத்தில், முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

கேள்வி:—"அண்மையில் பதவி போன முதலமைச்சருக்கு மட்டுந்தான் இப்படிப் போலீசுப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா? அவருக்கு முன்னாலே முதலமைச்சர்களாக இருந்து பதவி விலகியவர்களுக்கெல்லாம் இப்படிப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதா?"

பதில்:—"முன்னாள் முதலமைச்சர், மற்றும் அரசுத்துறையில் உயர்மட்டத்தில் இருந்தவர்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும், என்று அரசு கருதினால், அப்படி அளிப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

ஏழைகளுக்கு 50,000 ஏக்கர் நிலம்

இவ்வாண்டு அரசு வழங்கும்

சென்னை, மார்ச் 25—

"புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு கடந்த ஓராண்டுக் காலத்தில் 30,000 ஏக்கர் வரை பயிரிடுவதற்கான தரிசு நிலமும், வீட்டு மனைக்கட்டும், நிலமில்லாத ஏழை உழவர்களுக்கும், ஆதித்திராவிடர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது."

"புறம்போக்கு நிலங்களைப் 'பட்டா' வழங்குவதில் உள்ள விதிமுறைகளை எளிதாக்கி, இந்த ஆண்டு 50,000 ஏக்கர் வரை வழங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது"

என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், சட்டமன்றத்தில் அறிவித்தார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

27--3--68

சென்னை 31-வது வட்டம்

வள்ளியம்மை பகுத்தறிவு மன்ற 11-வது ஆண்டுவிழா; மாலை 7 மணிக்கு பெரம்பூர் படேல் ரோடில்; தலைவர்: மு. பாலகிருட்டிணன்; பேசுவோர்: சட்டமன்ற உறுப்பினர்கள் ஈரோடு சின்னசாமி, மாயூரம் என். கிட்டப்பா, பழனியம்மாள், மற்றும் வை. தணிகாசலம், மா.ரா. சீனிவாசன்.

சென்னை 93-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி மன்றத் துவக்க விழா; மாலை 7-மணிக்கு தியாகராய நகர் இராமகிருஷ்ணாபுரம் வடக்கு உஸ்மான் ரோடில் (நியூ பஜார் அருகில்); தலைவர்: வே. பச்சையப்பன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., க. அறிவழகன் எம்.எல்.சி. எஸ். கணேசன் எம்.எல்.ஏ., மாயவரம் என். கிட்டப்பா எம்.எல்.ஏ., நடிகமணி டி. வி. நாராயணசாமி, எம். குமார், வை. பாலசுந்தரம், கு. சுந்தரம், கோ. ச. துரை, தாமோதரம் மற்றும் பலர்.

தேப்பெருமாள்நல்லூர்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு மாரியம்மன் சன்னதி அருகில்; தலைவர்: த. கணேசன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., சு. பத்மநாபன், வழக்கறிஞர் ச. கோதண்டராமன், க. முத்துக்குஞ்சு, மற்றும் பலர்.

பூனச்சி

தி.மு.க துவக்க விழா; இரவு 7 மணிக்கு மாரியம்மன் திடலில்; தலைவர்: டி.எஸ். பொங்கியா கவுண்டர்; பேசுவோர்: சிவ. நடராசன், யு. எஸ். முத்துசாமி, இரா. செங்குட்டுவன், இரா. பொன்னுசாமி, அ. வெற்றிவேல், அ. க. துரைராசு, இரா. செயபால், மற்றும் பலர். (முருகு பாண்டியன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

28--3--68

சென்னை 96-வது வட்டம்

எஸ். எஸ். ஆர். மன்றம்—திருவள்ளுவர் படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு கோடம்பாக்கம் சீரங்கராசபுரம் ரோடில்: தலைவர்: ஏ. எஸ். இராமன் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, என். வி. நடராசன் எம்.எல்.சி., ஈரோடு சின்னசாமி எம்.எல்.ஏ., சா. கணேசன் எம்.சி., எம். குமார், சோ. கி. மூர்த்தி, செ. கண்ணப்பன், க. துரை, புலியூர் இராதா, ல. நாகப்பன், ம. நா. செயசந்திரன், எம். முத்து, எஸ். வையாபுரி, கே. ஜி. சாமி.

அன்றும் அப்படித்தான்- இன்றும் அப்படித்தான்!

சென்னை, மார்ச் 25—

"அமைச்சர்களின் சொத்துக்கள் பற்றி இதுவரையில் அறிவிக்கப்படாமலிருப்பதற்குக் காரணம்—அப்படி அறிவித்தால்—'சே! இவ்வளவுதானா?' என்று மதிக்கும் அளவுக்குத்தான் இருக்கின்றன—என்பதால்தான்!

"நாங்கள் இதுவரையில் பராமரிக்கப்பட்டு வந்ததே, எங்கள் கட்சி உறுப்பினர்கள்-ஆதரவாளர்களால்தான்! இப்போது, முன்பு இருந்ததுபோல் அவர்களுக்கு எங்களைக் குறித்து அவ்வளவு பொறுப்பு இல்லை! அதுதான் வேறுபாடு!

"அதனால்தான் பல இடங்களில் தி.மு. கழக ஆதரவாளர்கள், தங்கள் தொகுதிப் பிரதிநிதிகளுக்கு—அவர்கள் நிலையை உணர்ந்து—அவர்கள் ஆற்றவேண்டிய பொதுப் பணிக்கு வசதி செய்து தருவதற்காகக் கார், ஜீப்புகள் போன்றவற்றைப் பரிசுகளாக அளிக்கிறார்கள்! ஆளும் கட்சியாக நாங்கள் வருவதற்கு முன்பேகூட, மக்கள் அவ்வாறு பரிசளித்திருக்கிறார்கள்!"

--முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்றத்தில்)

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தல்

கழக வேட்பாளர்கள்

வட ஆற்காடு—தென்னாற்காடு மாவட்டங்களின் ஆசிரியர் தொகுதி சார்பாகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் தேர்தலில்

திரு. ப. உ. சண்முகம்

அவர்களும்

தென்னாற்காடு மாவட்டத்தின் உள்ளாட்சித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் தேர்தலில்

திரு. இரா. சாம்பசிவம்

அவர்களும்

கழக வேட்பாளர்களாகப் போட்டியிடுகிறார்கள். வட ஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களைச் சார்ந்த கழக அமைப்புகளின் நிர்வாகிகளும், தோழர்களும், நாடாளுமன்ற—சட்டமன்ற—நகராட்சி — உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் முனைந்து பணியாற்றி, தோழர்கள் ப. உ. சண்முகம் அவர்களும், இரா. சாம்பசிவம் அவர்களும்—அவரவர் போட்டியிடும் தொகுதிகளில் பெருவெற்றி பெறும் வகையில்—உறுதுணைபுரிந்து உழைப்பை நல்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

காங்கிரசு உறுப்பினர் மீதான உரிமைப் பிரச்சினை

குழுவின் பரிந்துரை ஏற்பு

சென்னை, மார்ச் 26—

"காங்கிரசு உறுப்பினர் திரு. வி. ஜார்ஜ் மீதான உரிமைப் பிரச்சினையில், அவர் வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதியதையொட்டி, பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம்" என, சட்டமன்ற உரிமை ஆய்வுக்குழு பரிந்துரைத்திருந்ததை இன்று சட்டமன்றம் ஒருமுகமாக ஏற்றுக்கொண்டது.

மத்திய அரசுப் பணியில் ஈடுபடும் மாநிலப் போலீசுப் படை

செலவு பற்றிய விளக்கம்

சென்னை, மார்ச் 25—

"இந்திய அரசுப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் நமது மாநிலப் படைக்கலம் தாங்கிய போலீசுப் படையினருக்கு வழங்கும் ஊதியச்செலவை, நிலைமைக்கேற்ப மத்திய அரசோ, சம்பந்தப்பட்ட மாநில அரசோ ஏற்றுக்கொள்கிறது"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

வெளியீட்டு விழா

மாயூரம் வேதநாயகம் அவர்களின் 'தேவதோத்திர மாலை' எனும் ஆங்கில மொழியாக்க நூலின் வெளியீட்டு விழா, 28—3—68 மாலை 6-மணிக்கு சென்னை-எஸ்பிளனேடு ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில், திரு. ஆர். அருளப்பா தலைமையில் நடைபெறும்; கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நூலினை வெளியிடுவார்; எஸ். டி. சுந்தரம் எம்.எல்.சி., டி. ஏ. தனபாண்டியன், திருமதி வசுமதி இராமசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

சிறு சேமிப்பு நிதி

"சிறு சேமிப்புத் தீவிர வசூல் திட்டத்தின்கீழ் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் பகுதியில் ரூ. 1,40,619 இதுவரையில் வசூல் செய்யப்பட்டுள்ளது" என்று ஆணையர் அறிவிக்கிறார்.

சு. தென்கோவன் நிகழ்ச்சிகள்

மார்ச் 29: காளாச்சேரி; 31: அளவலம். ஏப். 2; மணக்காடு; 3: திருமருகல்; 4: திருநள்ளாறு.

அரிசியின் தரத்தைக் காக்கத் தனி அதிகாரி

ஆலைகள் செய்யும் தவறுகளைக் கண்காணிக்க ஏற்பாடு

சென்னை, மார்ச் 25—

"ஆலைகளில் அரைக்கப்படும் அரிசியின் தரம் நன்றாக இருக்குமாறு கண்காணிப்பதற்காக, மாநிலம் முழுமைக்குமான ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை உணவு வழங்குதுறைத் துணை ஆணையாளர் பதவிக்குச் சமமாக நியமித்து, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

"எங்காவது உள்ள ஆலைகளில், தவறுகள் நடப்பதாக அவருடைய கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டால் அந்த ஆலையின் அனுமதியை நிறுத்திவைக்கவோ, அறவே நீக்கிவிடவோ அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது; இதனால் நல்ல முனனேற்றமும் ஏற்பட்டுள்ளது"

என்று, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது அறிவித்தார்.

கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவு

சென்னை நக்கீரர் கழகம்—திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் சார்பில் நடைபெறும் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுத் தொடர்ச்சியின் நிகழ்ச்சி, 27—3—68 மாலை 6-15 மணிக்கு சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறையில் நடைபெறும்; 'மொழியியல்' பற்றி பேராசிரியர் ரா. சீனிவாசன் எம்.ஏ.,எம்.லிட். அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

மலர்க் காட்சி

சென்னை மாநகராட்சியின் 45-ம் ஆண்டு மலர்க் காட்சியினை, 27—3—68 மாலை 6—30 மணிக்கு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் துவங்கி வைப்பார்; மார்ச் 27-ம் நாள் முதல் ஏப். 3-ம் நாள்வரை இக்காட்சியினைக் காணலாம்.

இந்திய முறை மருத்துவமனை

சென்னை, மார்ச் 26—

அரும்பாக்கம் மூலிகைப் பண்ணையில், இந்திய மருத்துவ முறை மருத்துவமனை கட்டுவதற்கு ரூ 8.18 இலட்சம் செலவிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த மருத்துவமனை, 100 படுக்கைகள் கொண்டதாக இருக்கும்.